செ.வெ.எண்-20 நாள்-12.02.2018

**அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்ந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், க.மேட்டுத்தெரு கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்ந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (12.02.2018) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் 2017-18 கீழ் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தில் நிழல் வலைக்கூடம் அமைப்பதற்காக பின்னேற்பு மானியமாக ரூ.75,000/- பெற்ற க.மேட்டுத்தெரு கிராமத்தைச் சேர்ந்த திருமதி.கலைசெல்வி, க/பெ.நாகராஜ் என்ற விவசாயின் கரும்பு நாற்றங்கால் நடவுப்பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டது.

குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யப்படும் கரும்பு நாற்றங்கால் சொட்டுநீர் பாசன நிலங்களில் மட்டுமே நடவு செய்ய அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கரும்பு நாற்றங்கால் பாதி மானிய விலையில் பின்னேற்பு மானியமாக விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 6000 எண்ணிக்கை கொண்ட நாற்றங்கால் வழங்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் களை எடுத்தல் செலவு, நீர்பாசனம் குறைக்கப்பட்டு தரமான வீரியமுள்ள கரும்பு நாற்றங்கால் நடப்படுவதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்க பெறும். எனவே, இத்திட்டத்தின் கீழ் கரும்பு விவசாயிகள் கரும்பு நாற்றங்கால் பயிரிட்டு பயன்பெறுமாறும், கூடுதல் தகவலுக்கு வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த ஆய்வின்போது, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) சு.அய்யாசாமி, உதவி இயக்குநர் (வேளாண்மை) (பொ) சாந்தி, வேளாண் அலுவலர் வடிவேல், விவசாயி சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**